**இந்துமகேஷ்**

**அவர்களின்**

# மேனியைக் கொல்வாய்...

**வெளியீட்டகம்:**

பூவரசு வாசகர்வட்டம்
**ஜேர்மனி.**

**மின்னூல் ஆக்கம்:**



# எம்முரை

**'இலக்கியச் செம்மல்' இந்துமகேஷ்...!**

புகலிடத் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பரிச்சயமான பெயர். கதைகள், நாவல்கள் என்பவற்றால் தாயகத்தில் நன்கு அறியப்பட்டவர். தாயகத்தில் 80களில் நாவலுலகில் தனக்கென முத்திரை பதித்து பிரபலமாகப் பேசப்பட்டவர்.

புகலிடத்தில் பதினைந்து ஆண்டுகளாக வெளிவரும் 'பூவரசு' இனிய தமிழ் ஏட்டின் சொந்தக்காரர். அதன் மூலம் உருவான அறிமுகமான கலைஞர்கள் எழுத்தாளர்கள் பற்பலர்.

அவருடைய நாவல் ஒன்றை 'தமிழமுதம்' மின்னூலாக வெளியிட வேண்டும் என விரும்பி அவருடன் தொடர்புகொண்டபோது, பெருமனதுடன் 'மேனியைக் கொல்வாய்..' என்ற இக் குறுநாவலை மின்னூலாக்க அனுமதியளித்த திரு. இந்துமகேஷ் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்து, 'மேனியைக் கொல்வாய்...' எனும் இக்குறுநாவலை மாசி மாத வெளியீடாக வெளியிடுவதில் மிகவும் பெருமையுறுகிறோம்.

ஜேர்மனியில் வெளிவந்த ,தென்றல்' எனும் கையெழுத்துச் சஞ்சிகையில் வெளிவந்த இக் குறுநவீனம் 1992ல் பூவரசு வாசகர்வட்டத்தின் வெளியீடாக வெளிவந்தது.

வணக்கம்.

'தமிழமுதம்'
1.02.2005

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

'இலக்கியச் செம்மல்' இந்துமகேஷின் மேனியைக் கொல்வாய்...



## என் அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

நிறைந்த அன்புடன்,
பூவரசு வாசகர் வட்டத்தின்மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி!
சில வருடங்களுக்கு முன்பு வெளியான எனது தொடர்கதை ஒன்றினை இப்போது தனிநூல் வடிவில் உங்கள் கைகளில் தவழவிட்டிருக்கிறேன்.
தொடர்ந்தும் எனது நவீனங்கள்மூலமும் கவிதைத் தொகுதிகள்மூலமும் பூவரசு வாசகர்வட்டத்தினூடே உங்களைச் சந்திக்க ஆவலுடையேன்.

உங்கள் அன்பும் ஆதரவும் என்றும்போல் என் எழுதுகோலுக்குத் துணைவரும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அன்பன்,
உங்கள்~
இந்துமகேஷ்.

❖❖❖❖❖❖

# மேனியைக் கொல்வாய்!

1.

மனத்தில் மறுபடியும் ஒரு தவிப்பு.....

"இதெல்லாம் இங்கே சகஜம்" என்று சாந்திப்படுத்திக் கொள்ள முனைந்தாலும் மனம் மறுபடி தவித்து...!

-பார்வையை எங்கே படரவிட்டாலும் அங்கேயும் நிகழ்கிறமாதிரி கண்களுக்குள் அந்தக் காட்சி....

"சுஸன்னா நீயும் கூடவா?"

-அவள்மட்டும் பெண்ணில்லையா..? அவளுக்கு உணர்ச்சிகள் இல்லையா? ஏன் வேறுபடுத்திப் பார்க்கின்றாய்...? மனித மன உணர்வுகளுக்கு அப்பால் இவள் மட்டும் வேறு ஒரு உலகத்திலிருந்து இறங்கி வந்தவளா, என்ன...?

"ஆம்... என்னைப் பொறுத்தவரை அப்படித்தான்..."

-இவள் இந்தச் சமூகத்தினுள் பிறந்திருக்க வேண்டியவளே அல்ல...

நீலமாய் பரந்து கிடக்கும் வான்வெளியில் உலவித்திரிகிற வெண்பஞ்சு மேகங்களிடையே ஒரு தேவதை உலா வருகிறமாதிரி....

சுஸன்னா!

-அவளது நீலவிழிகள் இவனது பார்வையைச் சந்திக்கின்ற

போதெல்லாம்... அந்தச் சில வினாடிப் பொழுதுகளில்... பரந்து கிடக்கும் வான் வெளியில்தான் இவன் பறந்து திரிகிறான்.

-அவளுக்கு வயது பதினெட்டாம்.

-ஆசியாவின் பதினெட்டை விட ஐரோப்பாவின் பதினெட்டில் செழுமை கொஞ்சம் அதிகம்...

சுஸன்னாவின் முகத்தில் குழந்தைத்தனம் இன்னும் மாறவில்லை... அந்தக் குழந்தைத்தனமான சுபாவம்தான் அவளிலிருந்து இவனைச் சில மீற்றர் தள்ளியே நிற்க வைத்தது...

என்றாலும் மனதில் எப்போதும் அவளுக்கு ஒரு ஆராதனை நடக்கும்... இமைகளை மூடிக்கொண்டு அவளது நீல விழிகளை நினைத்துப் பார்க்கையில்... சிரிப்பை ரசிக்கையில்... இவனையும் மீறி இவனது உதடுகள் அவளது மேனியில் ஊர்ந்து செல்லும்...

“மடையா” என்று தன்னைக் கடிந்து கொள்வான்...

“இப்படியெல்லாம் உன் கற்பனையை ஏன் அசிங்கப்படுத்திக் கொள்கிறாய்...?” என்று தன்னைக் கடிந்து கொள்வான்...

உடம்பு... உடம்பு... உடம்பு...

இதைத் தவிர உனக்கு வேறு சங்கதியே தெரியாதா!

ஒரு பெண்ணின் உடம்பின் மீதுதான் உன் கவனம் பதிகிறதே தவிர அந்த உடம்புக்குள்ளே இருக்கிற ஒரு இதயத்தைப்பற்றி நீ ஏன்

சிந்திக்க மறுக்கிறாய்?

-மனதுக்குள்ளே நீதிவிசாரணை தொடங்கிவிடும்... தணிந்து போவான்...

கோபப்பட்டுக் காலை உயர்த்தி மெள்ளச் சினக்கிற பூனைக்குட்டி மாதிரி மனம் ஒரு சின்னச் சீற்றத்துடன் அடங்கிப் போகும்...

“காயமே இது பொய்யடா... வெறும் காற்றடைத்த பையடா... மாயனாராம் குயவன் செய்த மண்ணுபாண்டம் ஓடடா...”

-என்று இளவயதில் எங்கோ படித்த சித்தர் பாடல் நினைவுக்கு வரும்..

“ஒரு பிடியளவு இதயம் துடிப்படங்கி இந்த உடம்பு ஒருபிடி சாம்பலாகிப் போகின்ற வரையில்... உணர்ச்சிகளுக்குள்ளேயே நீச்சலடிக்கிற வாழ்க்கையில்...”

-வேண்டாம்... தத்துவங்கள் இங்கே எடுபடப்போவதில்லை...

அதற்கு அவசியமும் இல்லை...

-எந்த சுஸன்னாவை இவன் இதயத்துள் நுழைந்து இடம் பிடித்துக் கொண்டாளோ... எந்த சுஸன்னாவை இவன் பரிசுத்தமானவளாக, புனிதமானவளாகத் தனக்குள் கற்பிதம் செய்துகொண்டிருந்தானோ... எந்த சுஸன்னாவின் ஸ்பரிசங்கள் இவனது கற்பனை உலகத்துக்குப் புளகாங்கிதத்தை உண்டு பண்ணிக்கொண்டிருந்ததோ... அதே சுஸன்னா.... இப்போது...?

-அதில் தப்பெதுவும் இல்லை...

-ஒரு ஆணின் அணைப்பில் ஒரு பெண் தன்னையிழந்து கிடப்பது, அப்படியொன்றும் நிகழக்கூடாத காரியமும் அல்ல... இயற்கைக்குப் புறம்பானதும் அல்ல...

ஆனால்...

இருக்கக்கூடாத இடத்தில் சுஸன்னா...

அணைக்கக்கூடாத ஒரு ஆடவன் கைகளுக்குள்...

அவனது கைகளுக்குள் அவள் இல்லாமல் என் கைகளுக்குள் அவள் இருந்தால்மட்டும் அது நியாயமான காரியம் ஆகிவிடுமா...?

“ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு காத்தாடி போலாடுது...!”

பிரிவுத் துயரை வார்த்தைகளாய்ப் பிழிந்து அந்தச் சோகத்திலும் ஒரு சுகம் காணவைக்கிறமாதிரி ஒலிப்பதிவு நாடாவுக்குள்ளிருந்து கொண்டு ஜெயச்சந்திரன்...

“ரஞ்சன்!” என்று கூச்சலிட்டான் இவன்...

“மச்சான்! அந்தப்பாட்டை நிற்பாட்டு... பிளீஸ்!”

-ரஞ்சனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தினத்துக்கு ஆகக்குறைந்தது இரண்டு தடவைகளாவது இந்தப் பாட்டை ஒலிக்கவிட்டு இரசிக்கிற இவனுக்கு- இந்தப் பாலாவுக்கு- இன்றைக்கு என்ன வந்தது?

"என்ன மச்சான் ஏன் இண்டைக்கு ஒருமாதிரி இருக்கிறாய்?"

இவன் படுக்கையில் முகத்தைப் புதைத்துக்கொண்டான்...

'வேண்டாம்... ரஞ்சனிடம் எதுவும் சொல்லவேண்டாம்...'

❐

சுவர்க்கடிகாரம் காலைமணி பத்து என்றது.

ஒருநாளும் இவ்வளவுநேரத்துக்கு பாலா படுக்கையில் கிடந்ததில்லை...

விடிகாலைச் சூரியன் இங்கே தன்னுடைய நேரத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தாலும் அறைக்குள் வெய்யில் நுழைகிறபோதே பாலாவுக்கும் விழிப்பு வந்துவிடும்... அது நான்குமணியாக இருந்தாலும் சரி எட்டுமணியாக இருந்தாலும் சரி... போர்வையையும் சோம்பலையும் ஒன்றாக உதறிவிட்டு எழுந்துகொள்வான் அவன்...

இன்றைக்கு இவனில் நிறைய மாற்றம் இருந்தது...

"உனக்கு என்ன மச்சான்... ஏதேனும் சுகமில்லையா?" என்று மறுபடியும் தட்டினான் ரஞ்சன்...

"ஒன்றுமில்லை மச்சான்" என்றான் இவன்... அந்த வார்த்தையிலேயே அவனுக்கு நிறையத் துன்பங்கள் இருப்பதுமாதிரிப்பட்டது ரஞ்சனுக்கு.

அறைக்கு வெளியே பொலிஸ்காரர்களின் அலறல்...

அம்புலன்ஸின் ஓலம்...

'என்ன திடீரென்று...'

கண்ணாடி ஜன்னலருகே போய் நின்று தெருவில் பார்வையைப் படர விட்டான் ரஞ்சன்...

இரத்தக்காயங்களுடன் ஒரு இளம்பெண்ணை அம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்...

அவளை எங்கோ பார்த்தமாதிரி ரஞ்சனுக்குப்பட்டது...

"பாலா..!" என்று அவசரமாகத் திரும்பினான்...

"சுஸன்னாவுக்கு ஏதோ அக்சிடெண்ட்"

துடித்தெழுந்தான் பாலா.

"சுஸன்னா?"

"ம்... உன்னுடைய சுஸன்னாதான்!"

-இவனது இதயத்துடிப்பு ஒருகணம் அடங்கி மறுபடி வேகப்பட்டது.

❍❍❍

*2.*

*சுஸன்னாவின் விழிகள் மூடிக்கொண்டிருந்தன...*

*நெஞ்சத்துடிப்பு நிரந்தரமாய் அடங்கிவிட்டிருந்தது...*

*மலராய்ச் சிரிப்பவளின் மலர்மேனியை மலர்வளையங்கள் மறைத்துக் கொண்டிருந்தன.*

*பிரமைபிடித்தாற்போல சுஸன்னாவின் உயிரிழந்த மேனியை வெறித்தபடி நின்றான் பாலா.*

*அருகில் ரஞ்சன்...*

*அறிமுகமில்லாத வெள்ளைத்தோல் மனிதர்கள்...*

*இன்னும் சற்று நேரத்தில் சுஸன்னா மண்ணுக்குள் மறைந்துபோவாள்...*

*“போகலாம் ரஞ்சன்!” என்றான் பாலா...*

*“சுஸன்னா இங்கே புதையுண்டுபோறதை நான் பார்க்கவேணாம் ரஞ்சன்... வா!”*

*தெருவுக்கு வந்தார்கள்.*

*சிக்னலைக் கடப்பதற்காகத் தெருமுனையில் காத்திருக்கையில் வானத்தில் ஒரு ஹெலிகப்டர் வட்டமிட்டுக்கொண்டு போயிற்று...*

பாலாவின் மனதுக்குள்ளே படபடக்கிற நினைப்புக்கள் மாதிரி...

சுஸன்னா...!

-நேற்றுவரை அவள் எத்தனைவிதமாய் அவனது மனதுக்குள் வித்தை காட்டினாள்.

இப்போது...?

அவள் உயிர் அடங்கிப்போன பிறகு... இல்லை... எதுவுமே இல்லை...!

“ஹேய்... பாலி...! (பாலாவை அவள் அப்படித்தான் அழைப்பாள்) உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா?”

-ஒரு சந்திப்பின்போது அவள் நேரடியாகவே கேட்டாள்.

அந்தக் கேள்வியில் இவனுக்கு நிறைய ஆனந்தம் இருந்தது... மனதுக்குள் ஒரு பெருமிதம் வந்தது... அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு அளவிடமுடியாத பரவசம் இருந்தது...

“ஹேய் பாலி உன்னைத்தான்...”

அவள் இவன் கன்னத்தில் தட்டினாள்.

“என்ன யோசிக்கிறாய்?”

“ஒன்றுமில்லை!” என்றான் பாலா.

“ஒன்றுமில்லை?” என்று திருப்பிக்கேட்டுச் சிரித்தாள் அவள்... அந்தச் சிரிப்பில் இவனுக்கு நிறைய மோகம் இருந்தது...

“சொல்லேன் பாலி... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?”

“பார்க்கலாம்!”

“இப்படியெல்லாம் வளவளத்த பதில் கூடாது பாலி... வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் சொல்...!”

“நான் கொஞ்சம் யோசிக்கவேண்டும்!”

“எதைப்பற்றி?”

“உன் பருவத்தைப்பற்றி...! சுஸன்னா... நீ ரொம்பச் சின்னப்பெண்... வாழ்க்கையை நீ இன்னும் புரிந்துகொள்ள நிறைய இருக்கிறது...!”

“சின்னப்பெண்...? நான்...?” –மறுபடி சிரிப்பு..

“என்னை நன்றாகப் பார்... எதற்காக நீ அப்படிச் சொல்கிறாய்... பாலி? ஒருவேளை உனக்கு நான் ஈடுகொடுக்கமாட்டேன் என்று உனக்குப்படுகிறநதா?”

“உடம்பைப்பற்றிக் கதைக்காதே... நான் சொல்வது உன் மனதைப்பற்றி!”

“மனம்...? என்ன பாலி நீ என்னை ரொம்பவும்தான் குழப்புகிறாய்!”

“வாழ்க்கை உடம்போடுமட்டும் முடிந்துபோகிற சங்கதியல்ல சுஸன்னா... அதற்கும் அப்பால் மனம் என்ற ஒன்று இருக்கிறதே...”

“பொறு... பொறு... என்ன பாலி நீ...! உடம்புக்குள்தானே மனம் இருக்கிறது... உடம்பு இருக்கிறவரைதானே மனம் வாழமுடியும்...? உலகத்தில் வாழ்கின்ற எல்லோரும் உடம்பால்தானே வாழ்கிறார்கள்... பசி, காதல் என்கின்ற சங்கதிகள் எல்லாம் உடம்பினால்தானே? இந்த உடம்பு இல்லாவிட்டால் எதுவுமே இல்லையே...”

-அலையலையாய் எழும் அவளது கேள்விகளை இவன் தனக்குள் இரசித்துக்கொண்டான்... மெல்லியதாய் ஒரு புன்முறுவல் காட்டினான்.

“உன்னை நான் சின்னப்பெண் என்றா சொன்னேன்... தப்பு... தப்பு...!” என்றான்.

“அப்படி வா வழிக்கு!” என்றாள் சுஸன்னா...

“நீ சின்னப்பெண்ணே அல்ல... குழந்தை!” என்றான் கிண்டலாக.

அவள் பொய்க்கோபம் காட்டினாள்...

செல்லமாய் அவனது மார்பில் இரண்டு கைகளாலும் குத்தினாள்.

“வேண்டாம் பாலி... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவே வேண்டாம்... உன்னை நான் கட்டிக்கொண்டால் எனக்குப் பைத்தியம்தான் பிடிக்கும்...!”

“இப்போதுமட்டும் என்ன நீ புத்திசாலியாகவா இருக்கிறாய்?”

“இல்லை!” என்று பலமாகத் தலையாட்டினாள் சுஸன்னா...

“ரொம்பவும் புத்திசாலியாக இருக்கக்கூடாது பாலி. பிறகு வாழ்க்கை ருசிக்காது...”

“முட்டாள்கள் எல்லாம் வாழ்க்கையை ருசிக்கிறார்கள் என்றா சொல்கிறாய்...?”

“உன்னைப் பார்த்தால் எனக்கு அப்படியும் தோன்றவில்லை பாலி!” என்று மறுபடி சிரித்தாள் சுஸன்னா.

“ஏன் பாலி... மறுபடி நீ எப்போது உன் தாய்நாட்டுக்குத் திரும்பப் போகிறாய்?”

“சுதந்திரமண்ணுக்கு நாங்கள் சொநச்தக்காரர்களான பிறகு...!”

“நீ தீவிரவாதியா?”

“இல்லை... சிந்தனைவாதி!”

“உன்னோடு பேசிவெல்ல என்னால் முடியாது!”

“அப்படியென்றால் சரி... உன்னை நான் கல்யாணம்பண்ணிக் கொள்கிறேன்.”

“ஆனால் பாலி... உன்னோடு அதிககாலம் நான் வாழமாட்டேன்!”

“தெரியும்!” என்றான் பாலா.

“இந்த நாட்டுப் பெண்களைப்பற்றி எனக்கு நிறையத் தெரியும்... இவர்கள் எவனுடனும் நெடுநாட்கள் வாழ்ந்ததில்லை... நீ சொன்னாயே உடம்பு... இந்த உடம்புக்காகமட்டும் இவர்கள் வாழ்கிறார்கள்..!”

“வாழ்க்கை என்பது வாழத்தானே பாலி.. இதில் தப்பென்ன...? உன்னை எனக்குப் பிடிக்காவிட்டால்... என்னை உனக்குப் பிடிக்காவிட்டால் இரண்டு பேரும் விலகிப் போகிறோம்... கல்யாணத்தில்மட்டும் இதை நடைமுறைப்படுத்தத் தயங்குவானேன்..? பிடிக்காத ஆணுக்குள் ஒரு பெண்ணும் விருப்பப்படாத பெண்ணுக்குள் ஒரு ஆணும் கட்டுண்டு வாழ்நாள் முழுதும் கவலைப்பட்டுத் தொலைப்பதைவிட விரும்பிய இன்னொரு வாழ்க்கையைத் தேடிப் போவதில் தவறென்ன?”

“இப்படிப் பார்த்தால் ஒவ்வொருவரிடமும் நமக்குப் பிடிக்காத சில இயல்புகள் இருக்கத்தான் செய்யும்... அதற்காக ஒவ்வொரு கணவனையும் மனைவிமார் விவாகரத்துச்செய்து இன்னொரு கணவனைத் தேடிக்கொண்டே போனால்... முடிவு என்னவாகும் சுஸன்னா? எத்தனை கணவர்களுக்கு நீ உன்னைக் கொடுக்கப் போகிறாய்?”

-பாலாவின் கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் அவனது கரு விழிகளையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

“சரி ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்தாலும் ஒருநாள் என்னைவிட்டு நீயோ உன்னைவிட்டு நானோ பிரிந்துதானே ஆக வேண்டும்!”

“எதனாலும் நம்மைப் பிரித்துவிட முடியாது என்று இணைவதற்குப்

பெயர்தானே காதல்!"

"ஆனால் மரணம் நம்மைப் பிரித்துவிடுமே?"

'வேண்டாம் சுஸன்னா...!' என்று பாலாவின் மனம் துடித்தது.

"நான் வாழும்வரையில் நீ என்னருகிலேயே இருக்கவேண்டும்... உன் மடியிலேயே நான் துயிலவேண்டும்... மரணம்கூட நம்மைப் பிரித்துவிட வேண்டாம்."

ஆனால்-

மரணம் இப்போது முந்திக்கொண்டுவிட்டது.

சுஸன்னா இதை முன்பே தெரிந்திருந்தாளோ...

தன் மரணத்துக்குப் பின்னும் தன்னை நேசிக்கும் ஒருத்தனின் இதயத்துக்காகவே அவள் என்னைத் தேர்ந்தெடுத்தாளோ... ஆனால், மனங்கள்மட்டுமே இணைந்தன... உடல்கள் அல்ல... என்றாலும் அவள் எனக்குள் ஐக்கியமாகி... என்னோடு நிரந்தரமாகி...!

"பாலா!" என்று அவனைச் சட்டெனப் பின்னுக்கு இழுத்தான் ரஞ்சன்...

முன்னால் ஒரு கார் கிரீச்சிட்டுக் கத்திவிட்டு முறைத்தது.

"ஒரு செக்கனிலை இப்ப உன்ரை உயிரும் போகப்பார்த்திருந்தது...!" என்றான் ரஞ்சன்.

“உன்ரை துன்பம் எனக்குத் தெரியும் பாலா... ஆனா மற்றவங்களுக்குத் தெரியாது... தெருவிலை போறபோதாவது எச்சரிக்கையாய் வா...!“

-இருவரும் பஸ்ஸூக்காக நடந்தார்கள்.

விசுக்கென்று ஒரு வெறும் பியர்போத்தல் பறந்துவந்து பாலாவின் முதுகில் மோதிக் கீழேவிழுந்து சிதறிற்று.

திடுக்கிட்டாற்போல் நண்பர்கள் பின்னால் திரும்பிப் பார்த்தபோது...

நாலைந்துபேர் கொண்ட மொட்டையர் குழுவொன்று இவர்களை நோக்கி வேகமாய் வந்துகொண்டிருந்தது.

❍❍❍

3.

ரஞ்சனின் கண்களில் இரத்தச் சிவப்பேறிற்று...

கொதிக்கும் மனதைப் பிரயத்தனப்பட்டு அடக்கவேண்டியிருந்தது.

முன்னோக்கி வந்த மொட்டையர்கள் மிகவும் அண்மித்திருந்தார்கள்.

ரஞ்சன் பாலாவைப் பார்த்தான்...

அவன் கொதிப்பில்லாமல் குழப்பமில்லாமல் நின்றிருந்தான்...

உதட்டோரத்தில் ஒரு விரக்திச் சிரிப்பு ஊர்ந்தது.

‘என்ன செய்யப்போகிறாய் ரஞ்சன் இவர்களுடன் மோதிப் பார்க்கப் போகிறாயா?’ என்று கேட்கிறமாதிரிப் பார்வை...

“போகலாம் வா!’’ என்றான் மெதுவாக.

“பொறு இவன்களை ரெண்டு கேள்வி கேட்டிட்டு வாறன்”

“அதாலை ஒரு பிரயோசனமும் இல்லை மச்சான்!” என்றான் பாலா...

“வம்பு செய்கிறவங்களோடை நாங்கள் மல்லுக்கு நிண்டால் எங்கடை நேரம்தான் பாழாகும்.”

“அதுக்காக இவன்களை இப்பிடியே விட்டிட்டால் பிறகு இவன்கள்

எங்களை மதிக்கமாட்டாங்கள்."

"இப்பமட்டுமில்லை எப்பவுமே இவங்கள் எங்களை மதிக்கப் போறதில்லை... இப்ப இங்கை நாங்கள் காட்டுகிற ரோஷத்தை நாங்கள் எங்கடை நாட்டிலை காட்டியிருந்தால் இண்டைக்கு இவங்கள் எங்களை இளக்காரப்படுத்துகிற நிலைமை வந்திருக்காது."

எதுவுமே நடக்காததுமாதிரி அந்தக் குழு இவர்களைக் கடந்தது.

"ஹேய்!" என்று அவர்களைச் சீண்டினான் ரஞ்சன்.

எல்லோரும் ஒரேநேரத்தில் இவனை நோக்கித் திரும்பினார்கள்.

"என்ன?" என்றான் ஒருவன் விறைப்பாக.

தெருவில் சிதறிக்கிடந்த பியர்போத்திலைச் சுட்டிக்காட்டினான் ரஞ்சன்.

"அதற்கென்ன இப்போது?" என்றான் இன்னொருவன் அலட்சியமாக.

ரஞ்சன் கோபத்தைத் தணித்துக்கொண்டு மெதுவாகச் சொன்னான்.

"இது உங்கள் நாடு... இதை நீங்களே அசிங்கப்படுத்தக்கூடாது!"

"ஏன்?... நாங்கள் சுத்தமாக வைத்திருந்தால் நீங்கள் அசிங்கப்படுத்தலாம் என்று பார்க்கிறாயா?"

அதில் என்ன பகிடி இருந்ததென்று தெரியவில்லை...

அவனுடைய நண்பர்கள் சத்தம்போட்டுச் சிரித்தார்கள்...

தம்பாட்டில் அலட்சியமாக நடந்தார்கள்...

பின்னால் போனவனின் கையை எட்டிப்பிடித்தான் ரஞ்சன்...

“நீ உன் நாட்டை எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்... அதற்காக எங்கள்மீது சேட்டைவிடாதே... நாங்கள் மிருகங்கள் அல்ல... நாங்களும் மனிதர்கள்தான்!”

“அப்படியா...?” என்று வியப்புடன் கேட்டு தன் மஞ்சட் கண்களை அகலவிரித்தான் அவன்...

“உன்னுடைய பிரசங்கத்தை உன்னுடைய ஆட்களோடு வைத்துக் கொள்... அதிகம் கதைத்தாயானால் உனக்கு ஆபத்து!”

அவன் ரஞ்சனை உதறிவிட்டு அலட்சியமாக நடந்தான்.

ஆங்கிலத்தில் மிகவும் மோசமான வார்த்தையினால் அவனைத் திட்டிவிட்டு பாலாவின் பக்கம் திரும்பினான் ரஞ்சன்.

“வரவர இவன்களுக்குத் திமிர் கூடிட்டுது!”

“இவன்களிலை நீ கோபப்படுகிறதிலை அர்த்தமில்லை மச்சான்...” என்றான் பாலா.

“இது அவங்கடை நாடு... இங்கை அவங்கள் எப்படியும் நடக்கலாம்... சட்டத்தைத் தவிர அவங்கள் வேறை யாருக்கும் பயப்பிடுகிறதில்லை.

சொந்த நாட்டிலையே சுதந்திரத்துக்காகப் போராடவேண்டிய நாங்கள் வந்த நாட்டிலை அதை எப்படி எதிர்பார்க்கமுடியும்?”

“அப்ப இங்கையும் நாங்கள் அடிமைகளா?”

“ஒருவகையிலை அப்படித்தான்!” என்றான் பாலா.

பஸ்ஸில் ஏறிக்கொண்டதும் மறுபடி மௌனம்.

மௌனத்துக்குள்ளே மறுபடி சுஸன்னா.

அவளை நினைத்துக்கொண்டதும் மனது மறுபடி அந்தரிக்கத் தொடங்கிவிட்டது.

“ஹேய் பாலி... எனக்கு ஒரு ஆசை!”

“சொல்லு! சுஸன்னா...’’

“நான் உன்னுடைய நாட்டுப் பெண்கள்மாதிரி சேலை கட்டிக் கொண்டு... தலை நிறையப் பூவைத்துக்கொண்டு, நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டு, அப்படியே உன் தோளில் தலை சாய்த்துக் கொண்டு உனது நாட்டில் உன்னோடு கடற்கரை மணலில் நடந்து திரியவேண்டும்...’’

“அது முடியாது சுஸன்னா... எங்கள் நாட்டுப் பெண்கள்மாதிரி உன்னால் எதுவுமே செய்யமுடியாது!’’

“ஏன் முடியாதென்கிறாய்...? எனக்குச் சேலைகட்டுகிற மாதிரியைச்

சொல்லித் தா... கட்டுகிறேன்.’’

“ஆனால் எங்கள் நாட்டுப் பெண்களுக்குக் கருநிறக் கூந்தல் இடைவரை நீண்டு தொங்கும்... பின்னல்போட்டுப் பூவைத்துக் கொள்ளலாம்... உனக்கு குதிரைவால் மாதிரிக் கூந்தல். இதில் எங்கே பூ வைப்பது?’’

“ஹேய்!’’ என்று சிணுங்கி இவன் தோள்களைப்பற்றிக் குலுக்கி...

“பாலி நிஜத்தைச் சொல்லு... மெய்யாகவே நான் அழகில்லையா?’’

அவன் பதில் சொல்லாமல் அவளது நீலவிழிகளை ஊடுருவினான்.

அழகு என்பதற்கு மேலாக அழகு என்ற சொல்லுக்கு ஒரு அர்த்தம் இருந்தால் - அதுதான் சுஸன்னா.

தனிமையில் இருக்கும்போது பாலா அவளுக்குத் தன் மனத்தால் சேலை கட்டிப் பார்த்திருக்கிறான்... அவளது பொன்னிறக் கூந்தலை நீளமாக வளரவிட்டுப் பூ முடித்துப் பார்த்திருக்கிறான்...

அவளது சிவந்த நெற்றியில் குங்குமத்தை இட்டு அவளது சங்குக் கழுத்தில் பொன்தாலி பூட்டிப் பார்த்திருக்கிறான்...

எல்லாத் தமிழ் அழகிகளையும் எடுத்தெறிந்துவிடுவாளே இவள்.

“உன்னுடைய நாட்டுப் பிரச்சினை எப்போது தீரும் பாலி...? நீ எப்போது என்னை உன்னுடைய நாட்டுக்குக் கூட்டிப்போகப் போகிறாய்?’’

-அடிக்கடி அவள் எழுப்பும் கேள்வி.

“இரண்டு கேள்விக்குமே எனக்குப் பதில் சொல்லமுடியாது சுஸன்னா... என்னைப் பொறுத்தவரை இரண்டுமே சீக்கிரத்தில் ஆகுமென்று தோன்றவில்லை.’’

“உனக்கு மனத்தைரியம் போதாது பாலி... என்னைச் சின்னப்பெண் என்று சொல்லிவிட்டு நீ அடிக்கடி சின்னப்பையன் ஆகிவிடுகிறாய்..’’

அவள் அருகில் இருந்தபோது அத்தனை தூரம் மனத்தில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தாத அவளுடைய வார்த்தைகள்... இப்போது புதியனவாய்... புதிய அர்த்தங்களோடு...

‘சுஸன்னா... நீ சின்னப்பெண் அல்ல... எதிர்காலத்தைப்பற்றி நீ எப்படி எல்லாம் மனக்கோட்டைகளைக் கட்டியிருப்பாய்... எல்லாமே மழையில் கரைந்துபோகிற மணல்வீடுகள்மாதிரி... அடையாளம் தெரியாமல் போய்விடப்போகிறது என்று அப்போதே உன்னால் உணர்ந்து கொள்ள முடிந்திருந்ததா?’

பஸ் யார்மீதோ சட்டெனக் கோபப்பட்டு பிரேக்கிட்டுத் தரித்தது...

நினைவுகளிலிருந்து ஒரு கணம் மனதைப் பஸ்ஸுக்குள் இழுத்தான் பாலா...

பஸ்ஸின் குலுங்கலில் உள்ளே இருந்தவர்களெல்லாம் ஒரு சின்ன ஆட்டம் ஆடிவிட்டு சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

அடுத்த தரிப்பிடத்தில் பஸ் நின்றதும் பெண்கள் சிலர் கீழே

இறங்க-

"சுஸன்னா!'' என்று பதறி எழுந்தான் பாலா...

"என்ன பாலா?'' என்று அவன் கையை எட்டிப்பிடித்த ரஞ்சனின் பிடியை உதறிவிட்டு பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடினான் பாலா...

திகைப்பு அடங்காமல் ரஞ்சனும் கீழே இறங்க-

பாலா ஒருத்தியின் முன்னால் நின்று கூச்சலிட்டான்.

"சுஸன்னா... நான் சொல்வதைக் கேள்!''

❍❍❍

4.

ஆச்சரியம்தான்.

ஆனால் ஒப்புக்கொண்டே ஆகவேண்டிய உண்மை அது!

சில மணி நேரத்துக்கு முன்பு மண்ணுக்குள் மறைந்துபோன அதே சுஸன்னா இப்போது மறுபடியும் உயிருடன் வந்துநிற்கிறாள் என்றால் அது எப்படிச் சாத்தியமாகும்?...

ஒரே உருவ ஒற்றுமையில் இரு பெண்கள்... திரைப்படங்களில், கதைகளில் பார்க்கிறமாதிரி நிஜமாகவே!

எதிரில் நின்றவள் பாலாவைப் பார்த்துச் சிரித்தாள்...

சுஸன்னாவின் அதே சிரிப்பு!... இவன் இதயத்தைக் கொள்ளை கொண்டுபோகிற அதே மலர்ச்சிரிப்பு...

“நான் சுஸன்னா இல்லை... மரியா!’’

-இப்போதும் சிரிப்பு.

“எனக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன... நான் போகவேண்டும்.’’

-அவள் இவனுடைய பதிலுக்காய்க் காத்திருக்காமல் தன்பாட்டில் வேகமாய் நடந்துபோனாள்.

“பாலா உனக்கென்ன பைத்தியமா?’’ என்றான் ரஞ்சன்.

“ஏன் இப்படிக் கண்ட கண்ட பெண்களுக்குப் பின்னாலை ஓடித் திரிகிறாய்?’’

-நடந்துபோகும் அந்தப்பெண் மரியாமீதுதான் பாலாவின் பார்வை இன்னும் பதிந்திருந்தது.

‘இவள் என் சுஸன்னா மாதிரியே!’

-மனதுக்குள்ளே பட்டென ஏதோ மின்னல் அடித்தாற்போல்…

அன்றைக்கு ஒருநாள் எவனோ ஒரு ஆண்மகன் கைகளுக்குள் சுஸன்னா கிடந்ததைக்கண்டு இவன் மனம் புழுங்கிப்போனானே…

ஓடுகின்ற மின்சார ரயிலில் ஒருவன் சுஸன்னாவின் உதடுகளைக் கடித்துத் தின்றுவிடுகிறமாதிரிக் கவ்விக்கொண்டிருந்தானே…

இல்லை… அது என் சுஸன்னா இல்லை!

இவள்தான்… இந்த மரியாதான்!

'ஓ!… என் அவசர புத்தியால் என் சுஸன்னாவை நான் எப்படியெல்லாம் கற்பிதம் செய்துவிட்டேன்!’

-மனம் இன்னும் அந்தரிக்கத் தொடங்கிற்று…

இந்த மண்ணில் நிலைக்காமலே போய்விட்ட சுஸன்னாவின் வாழ்வை எண்ணிக்கொள்ளும் கணத்தில் எல்லாம் இந்த வாழ்வின்மீது ஒரு வெறுப்பே வந்தது.

‘ச்சீ!... என்ன வாழ்க்கை இது?’

“மனத்தை அலையவிடாமல் வா... வந்து பஸ்ஸிலை ஏறு!” என்றான் ரஞ்சன்.

“நாங்கள் நாடுவிட்டு நாடு வந்ததன் நோக்கம் என்ன?.. இங்கே நாங்கள் செய்துகொண்டிருக்கிற காரியங்கள் என்ன? பாலா... உனக்குப் புத்தி சொல்கிறதாய் நினைக்காதை... நீ கொஞ்சம் ஆறுதலாக எல்லாத்தையும் எல்லாத்தையும் யோசி...! காதலிக்கிறது, கல்யாணம் முடிக்கிறது இதுகளெல்லாம் காலாகாலத்திலை நடக்க வேண்டிய சங்கதிகள்தான்... யார் தடுத்தாலும் நடக்கவேண்டியது நடந்தே தீரும்... நீ சுஸன்னாவை நேசிக்கத்தொடங்கியபோது... அல்லது அவள் உன்னை நேசிச்சபோது நான் ஒண்டுக்கும் தடை சொல்லேல்லை... நீயாகத்தான் உன்ரை வாழ்க்கையைத் தீர்மானிக்க வேணும்... உற்ற நண்பனாய் இருந்தாலும் இந்த விசயத்திலை புத்தி சொல்கிறது எந்த வகையிலும் நியாயமில்லை எண்டதாலைதான் நான் பேசாமல் இருந்தன்... வெளிநாட்டுப் பெண்களிலை ஒருத்தனுக்கு மோகம் வாறதுவேறை... காதல் வாறதுவேறை..! மோகத்தைச் சில மார்க்குகளால முடிவுக்குக் கொண்டு வரலாம். ஆனால் காதலை உயிர்களாலைமட்டும்தான் முடிவுக்குக் கொண்டு வரமுடியும்... வெளிநாட்டுக்கு வந்தம்... வேளாவேளைக்குச் சாப்பாடு... வெடிச் சத்தங்கள் கேட்காத நிம்மதியான தூக்கம்... போதாகுறைக்கு எவளாவது ஒருத்தியின்ரை கூட்டுறவு... இவ்வளவும்தானா வாழ்க்கை? இதிலையே நீ சந்தோசப்படுகிறதாய் இருந்தால் எவ்வளவு காலத்துக்கு நீ சந்தோசப்பட முடியும்...? எவ்வளவு காலத்துக்கு நீ சலிப்பில்லாமல் வாழமுடியும்..? வாழ்க்கைக்கு எவ்வளவோ அர்த்தங்கள் உண்டு பாலா. அதை நீ புரிந்து கொள்... இந்த நாடு நம்முடைய வாழ்நாள் முழுதுக்கும் அடைக்கலம் தரப்போறதில்லை... சொந்த நாட்டிலை

கஞ்சி குடிச்சாலும் அதைச் சுதந்திரமாய்க் குடிக்கிற காலம் வர வேணும்... அதுக்கு உன்னாலை ஏதேனும் வழி செய்ய முடியுமா எண்டு பார்!”

-பாலா ரஞ்சனை ஒரு அலட்சியப் பார்வை பார்த்தான்.

போதிமரத்தடிக்குப் போன புத்தனுக்கு மறுபடி ஒரு ஞானோபதேசம் செய்வதுபோல்... இது என்ன தேவையற்ற வியாக்கியானங்கள்...

‘வாழ்க்கையே வேண்டாம் என்கிறேன் நான்... இப்படி வாழப் பழகு... அப்படி வாழப் பழகு என்று இது என்ன புது அறிவுரைகள்?’

-ரஞ்சனுடைய பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளாதவனாய்த் தன்பாட்டில் அவனருகே நடந்தான் பாலா.

‘வந்தநாடு, சொந்தநாடு என்று... இந்த மண்ணுக்கு எத்தனை எல்லைக் கோடுகளைப் போட்டாயிற்று? ஒரேவானம், ஒரே பூமி, ஒரேகாற்று... ஒவ்வொரு ஜீவனும் இதற்குள்தானே வாழ்கிறது... பிறகு ஏனிந்தப் பித்தலாட்டங்கள்?... கறுப்பன் என்றும், வெள்ளையன் என்றும், மேல் நாட்டவன் கீழ்நாட்டவன் என்றும், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் எதனால் இந்தப் பிரிவினைகள்?...

இவைகளெல்லாம் மனித மன விகாரங்களின் வெளிப்பாடுகள்...

-பாலாவின் மனம் எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தது...

இவன் மறந்திருந்த சொந்தநாட்டைரஞ்சன் மறுபடி ஞாபகமூட்டி விட்டதால் மனம் அங்கே போய் ஒட்டிக்கொண்டிருந்தது...

*நெஞ்சினுள்ளே புதியதாய் ஒரு தீ... பரவ ஆரம்பித்திருந்தது.*

❍❍❍

5.

‘தீ!’

-எல்லாவற்றையும் எரித்துச் சாம்பராக்கிவிட்டு தணிந்துபோகிற தீ...

இப்போது பாலாவின் மனத்திலும் அப்படி ஒரு தீ!

இந்தத் தீயின் வெம்மை தாளாமல் அவன் தவிக்கிறபோதெல்லாம் அவனுக்கு ஆறுதல்சொல்கிற ரஞ்சன் அந்தத் தீயை மூளவிட்டு அமைதியாய் இருந்தான்.

அப்பா... அம்மா... தங்கச்சி என்று இவனுடைய இரத்த உறவுகள்.... சொந்த மண்ணிலேயே அகதிகளாய்...!

நீயாவது ஓடு... எங்கையாவது ஓடு... நிம்மதியைத் தேடு...! என்ற அம்மா...

நீ பிறந்த இந்த நாட்டுக்கு உன்னால் ஏதாவது செய்யமுடியுமா என்று பார்... சுதந்திரமில்லாமல் சோறும் இல்லை...! என்று சொல்லி வழியனுப்பிவிட்ட அப்பா...

தமிழ்ப்பெண்கள் சமுதாயமே அழிந்தாலும் சீதனக்கொடுமை மட்டும் அழியவே அழியாது என்று சொல்லாமல் சொல்வதுபோல்-

என்னையும் மறந்துவிடாதே அண்ணா என்று அழுது விடைதந்த தங்கை...

-அகதிக்கோலத்துடன் நாட்டைவிட்டுப் புறப்பட்டபோது எவ்வளவோ சாதிப்பேன் என்று எண்ணிக்கொண்டு புறப்பட்ட இவன் மனம் இந்த வெள்ளைத்தோல் மனிதர்களிடையே வந்து அடைக்கலம் கோரிய பிறகு எப்படி எல்லாம் மாறிப்போய்விட்டது.

சொந்தநாட்டின் துயரங்கள்...

அங்கே எழுகின்ற மரண ஓலங்கள்...

இவைகளெல்லாம் அன்றாடச் சங்கதிகள்தானே என்கின்ற ஒரு அங்கலாய்ப்பு... நடப்பது நடக்கட்டும் நாம் என்ன செய்வது? என்கின்ற ஒரு ஒதுங்கல் மனப்பான்மை... சொந்தநாட்டை மறந்துவிட்டு இங்கே சுகம் காணவைக்கிற மனப்போக்கு....

சுஸன்னா...!

-அவள்மட்டும் இவன் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் ஒன்றில் இவன் ஒரு மனநோயாளியாகியிருப்பான் அல்லது பற்றறுத்த ஞானியாகியிருப்பான்.

‘காதல் என்பதுகூட ஒரு மனநோய்தான் என்று இப்போது இவனுக்குப் பட்டது. இவனுடைய மனநோய்க்கு மருந்தாக இருந்தவள் சுஸன்னா... அவளுடைய பருவம்...

இப்போது-

அவள் இல்லை!

எது வாழ்க்கை என்று அவன் எண்ணிக்கொண்டானோ.... எந்த

வாழ்க்கையில் இனிமை நிறைந்திருக்கிறது என்று அவன் உணர்ந்தானோ... அதுவே பொய் என்று இவனுக்குப் புரியவைத்து விட்டமாதிரி....

சுஸன்னா மண்ணுக்குள் மறைந்துபோனாள்.

இனி...

மறுபடியும் இவன் தன் வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்கவேண்டும்.

இனி ஒரு காதல்... திருமணம்... குடும்பம்...?

-அந்த நினைவே இவனால் சகிக்க முடியாததாயிருந்தது.

வேளாவேளைக்குச் சாப்பாடு... வெடிச்சத்தங்கள் கேட்காத நிம்மதியான தூக்கம்... போதாக்குறைக்கு எவளாவது ஒருத்தியின்ரை கூட்டுறவு... இவ்வளவும்தானா வாழ்க்கை?... இதிலையே சந்தோசப்படுகிறதாய் இருந்தால் எவ்வளவு காலத்துக்கு நீ சந்தோசப்பட முடியும்? எவ்வளவு காலத்துக்கு நீ சலிப்பில்லாமல் வாழமுடியும்?

-ரஞ்சனின் கேள்வி இவன் மனதைக் குடைந்தது.

நியாயமான கேள்விதான்.

ஆனால் ரஞ்சன் சொன்ன இவ்வளவும்தானா வாழ்க்கை?...

ஆனால்-

இந்த வாழ்க்கையையே அடையமுடியாமல்... அன்றாடம் தத்தளிக்கின்ற எத்தனையோ ஜீவன்கள்...

-பாலாவின் மனத்துக்குள் ஒரு உண்மை உறைத்தது...

துப்பாக்கியும் கையுமாய்... சொந்த மண்ணில் சுதந்திரத்துக்காக உயிரைப் பணயம் வைத்துக்கொண்டிருக்கிற வாலிபர்களை நினைத்துப் பார்த்தான்...

அவர்களுக்குப் பருவம் இல்லையா..? உணர்ச்சிகள் இல்லையா..? இந்த வாழ்க்கையில் பற்றுதல் இல்லையா? இருக்கிறது... எல்லாம் இருக்கிறது... ஆனால் அவர்கள் சொந்த மண்ணின் சுதந்திரத்துக்காகத் தங்களைப் பணயம் வைத்துக்கொண்டவர்கள்... உடலைவிட உடலின் விளைவான ஆசைகளைவிட உயரிய இலட்சியத்தைப் பெரிதாக நினைப்பவர்கள்...

“என்ன பாலி நீ... உடம்புக்குள்தானே மனம் இருக்கிறது... உடம்பு இருக்கிறவரைதானே மனம் வாழமுடியும்...? உலகத்தில் வாழ்கின்ற எல்லோரும் உடம்பால்தானே வாழ்கிறார்கள்?... பசி, காதல் என்கின்ற சங்கதிகள் எல்லாம் உடம்பினால்தானே? இந்த உடம்பு இல்லாவிட்டால் எதுவுமே இல்லையே...?’’

-என்றோ ஒருநாள் சுஸன்னா எழுப்பிய கேள்விகள்...

உடம்புக்காக வாழ்கின்ற வாழ்க்கை வேறு...

உடம்பினால் வாழ்கின்ற வாழ்க்கை வேறு... இந்த உடம்பை எந்தக் கணத்திலும் சுதந்திரவேள்வித் தீக்குப் பலிகொடுக்கத் தயாராய்

இருக்கிற இளம் வீரர்கள்... இவர்கள் உடம்புக்காக வாழவழில்லையே... போராட்டக் களத்தில் அவர்கள் தங்கள் உடம்பைத் துச்சமாய் மதித்துத்தானே போராடுகிறார்கள்?

அறைக்குள் வந்ததும் கடிதத் தாள்களும் பேனாவுமாய் உட்கார்ந்த பாலாவை அதிசயமாய்ப் பார்த்தான் ரஞ்சன்...

"ஆருக்கடா கடிதம்?"

"ஊருக்கு!"

"என்ன எழுதப்போறாய்?"

"ஊருக்குத் திரும்பிவாறதாய் எழுதப் போறன்!"

"மடையா!" என்று அவனைக் கடிந்துகொண்டான் ரஞ்சன்...

"கணநேரத்து உணர்ச்சியளுக்குத் தக்கமாதிரி மனத்தை அடிக்கடி மாத்திக் கொள்கிறதுக்குப் பேர் இலட்சியம் இல்லையடா... அதை முதலில் புரிஞ்சு கொள்... சுஸன்னா உயிரோடை இருக்கிறவரைக்கும் உனக்கு உன்ரை நாட்டின்ரை ஞாபகமே வரேல்லை... இப்ப அவள் செத்த பிறகு திடீர் ஞானோதயம்... நீ இப்ப ஊருக்குப்போய் என்ன செய்யப்போறை? உன்னாலை போராட முடியாது!"

"ஏன் முடியாது?" என்று திருப்பிக் கேட்டான் பாலா.

"போராட்டம் என்கிறது துப்பாக்கி ஏந்திறது மட்டுமில்லை... எதிரி எங்களை எந்தெந்த வழிகளிலை பலவீனப்படுத்தப் பார்க்கிறானோ

அந்தப் பலவீனங்கள் ஏற்படாமல் எங்கடை மக்களைப் பாதுகாக்கிறதுகூடப் போராட்டம்தான்... புரட்சி துப்பாக்கியிலை மட்டுமில்லை... மண்வெட்டியிலேயும் பேனாவிலேயும்கூட இருக்கு.”

ரஞ்சன் நண்பனின் தோளை மெதுவாகத் தட்டிக்கொடுத்தான்...

“இது திடீர் முடிவில்லையே?”

பாலா அவனுக்குப் பதில் பேசாமல் மேஜைமீது கிடந்த தன் டயரியை எடுத்தான்...

நவம்பர் 1 – 1986 திகதியைப் புரட்டினான்...

எழுதினான்...

*‘என் சுஸன்னா!...*
*இன்று உன் மலர்மேனி மண்ணுக்குள் புதையுண்டு போனநாள்...*
*உன் மலர்மேனி மட்டுமல்ல என் உடம்பின்மீது எனக்கிருந்த பற்றுதல்களையும்*
*நீ உன்னோடு மண்ணுக்குள் கொண்டு போயிருக்கிறாய்...! மறுபிறவி உண்டென்பதில் உனக்கு நம்பிக்கை உண்டோ இல்லையோ...*
*எனக்கு நிச்சயமாக உண்டு...*
*இனி எந்த ஜன்மத்திலும் உன்னைத் தவிர வேறொருத்தி என் மனத்தில் இடம்பிடிக்கப் போவதில்லை...*
*என்னுடைய இந்த உடம்பை இனி நான் எவரிடமும் கொடுக்க மாட்டேன்...*

*ஏனெனில், இந்த உடம்பை என் தாயகத்துக்கு நான் காணிக்கையாக்க வேண்டும்.*

*(நிறைவுறும்.)*

❍❍❍

(இக் குறுநவீனம் முதன்முதலாக தொடர்கதையாக
வெளியான ஆண்டு
1986.)